அடுத்த கேள்வி. வினா எண் 20—திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

ஏகபோக நெல் கொள்முதல்.

20—

*1013 திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) ஏகபோக நெல் கொள்முதல் முறை ரத்து செய்யப் படாததால் அரிசியின் விலை உயர்ந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ)ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஏகபோகக் கொள்முதல் முறை 1–7–1991 முதல் ரத்து செய்யப்பட்டு விட்டது.

(ஆ) இதற்காக இப்பொழுது புரட்சித் தலைவி அவர்கள் நாட்டிலே விளைந்திருக்கிற நெல்லைக் கொள்முதல் செய்ய அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15 ஆம் தேதி யிலிருந்து ஏகபோகக் கொள்முதலுக்கு ஆணை பிறப்பித்திருக் கிறார்கள்.

திரு. டி. சுதர்சனம் : பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க மகிழ்ச்சி. அரிசி விலையை சென்னையிலே குறைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள்?

முற்பகல் 9–35 மணி

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அரிசி விலையைப் பற்றி சொல்லியிருக்கிறேன். நாளைக்கு மானியம் வருகிறது. அதிலே விளக்கங்கள் அளிக்க தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறியபோது வரும் 15–ம் தேதியிலிருந்து ஏகபோக கொள்முதல் செய்யப் படும் என்றார்கள். அந்த ஏகபோக கொள்முதல் மாநிலம் முழு வதற்குமா அல்லது குறிப்பிட்ட சில மாவட்டங்களிலா என்பதை அறிய விரும்புகிறேன்,

1991 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதலில் காவிரி டெல்டாப் பகுதியில் தான் ஏகபோக நெல் கொள்முதலை வைத்து அமல் படுத்து கிறோம். இதிலே இந்த ஆண்டு நல்ல விலை தர ஏற்பாடாகி யிருக்கிறது. முன்னாலே எல்லாம் சாதாரண ரக அரிசிக்கு 205 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 215 ரூபாயும் மிக சன்ன ரகத்திற்கு 225 ரூபாயும் கொடுக்கப்பட்டது. இப்போது மத்திய அரசு 25 ரூபாய் தருகிறது. மாநில அரசு 35 ரூபாய் தருகிறது. ஆகவே, சாதாரண ரகத்திற்கு 60 ரூபாய் சேர்த்து 265 ரூபாயும் சன்ன ரகத்திற்கு 275 ரூபாயும், மிகச் சன்ன ரகத்திற்கு 285 ரூபாய் வீதமும் கொள்முதல் செய்ய இருக்கிறோம்.

இந்தக் கேள்வியின் அடிப்படையில் இன்னொன்றைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கொள்முதல் செய்கிற போது, அந்த நெல்லைத்தான் நாம் பாமர மக்களுக்கு ரேஷன் கார்டுகளில் வழங்குகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு சாதாரண ரகத் திற்கு அரிசி விலை 2 ரூபாய் என்றும் சன்ன ரகம் மிகச் சன்ன ரகததிற்கு 2½ ரூபாய் என்றும் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இந்த 2½ ரூபாய்க்கு விற்கிற அரிசியிலிருந்து தான் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இதன் மூலமாக அரசாங் கத்திற்கு ஏறக்குறைய 400 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே காவிரி டெல்டாப் பகுதிகளில் நெல் கொள் முதல் செய்கிறபோது சென்ற ஆண்டு வரையிலே என்ன நடைபெற் றிருந்தது என்று சொன்னால், அதிலே பதறு, கல், நெல், மண் எல்லாம் சேர்த்துப் போட்டு தந்து விடுவதாகத்தான் இருந்து கொண்டிருந்தது. இந்த ஆண்டிலே நான் அறிவிப்பு தர இருக்கிறேன். 400 கோடி ரூபாய் இழப்பை ஏற்றுக்கொண்டு ஏழை மக்களுக்காக அரிசி தருவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆகவே நான் விவசாயப் பெருங்குடி மக்களை இந்த மன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். நெல்லுக்கு இங்கே அதிகமாக விலை கொடுக்கப் படுகிறது. 60 ரூபாய் அதிகமாக கொடுக்கப்படுகிறது. ஆகவே அந்த விலை கொடுக்கிற காலக்கட்டத்தில், நடுவர்கள் அல்லது இடைத் தரகர்கள் அல்லது யாராவது ஒருவர் போய் விவசாயிகளிடத்திலே இருந்து நெல்லை வாங்கி வந்து அதில் கல், மண் போன்றவற்றை எல்லாம் கலப்பதற்குரிய இலாகாவே அவர் களிடத்தில் இருக்கிறது. ஆகவே அதை வைத்து கலந்து கொடுத்து விடுகிறார்கள். அதை அரவைக்கு கொடுக்கிறபோது சங்கடங்கள் ஏற்படுகின்றன.

ஆகவே, இதை மனத்திலே வைத்துக் கொண்டு, நெல் கொள்முதல் செய்கிற இடங்களில்—ஏறத்தாழ 1,340 இடங் களில் நெல் கொள் முதல் செய்யப்படுகிறது, அப்படிப்பட்ட இடங்களில்–நெல்லை நல்லதாக நியாயமானதாக விவசாயிகள்

தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி கல்லும் மண்ணும் கலந்து வருகிற நெல்லை யாராவது அதிகாரிகள் வேண்டுமென்றே வாங்கினால் அவர்கள் மீது நடவடிக்கையை இந்த அரசு எடுக்கத் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தொடக்க காலத்திலேயிருந்து தொடங்கி நடந்து வந்தன. ஆனால் கடந்த இரண்டாண்டு காலத்தில், தங்களுக்குத் தேவையான இடங்களில் அவற்றை அதிகார துஷ்பிரயோகம் செய்து மாற்றியிருக்கிறார்களே. இந்த ஆண்டு அந்த நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யும்போது அவை களைப் பழைய இடத்திற்கே மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.40

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே. அப்படிப்பட்ட புகார்கள் என்னிடத்தில் இதுவரை வரவில்லை அப்படி ஏதாவது இருக்குமானால்—ஏறத்தாழ 1,340 இடங்களில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது, தவறுகள் சில இடங்களில் ஏற்படுமானால்—மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத் திற்குக் கொண்டுவருவார்களானால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி நெல் கொள்முதல் என்பது ஏறத்தாழ 15-ந்தேதி யிலிருந்து தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உண்மை யிலேயே வரவேற்க வேண்டியது. அதே நேரத்தில் நெல்லிலே கல்லும் மண்ணுமாக கலக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அநேகமாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள் ரோடு ஓரங்களில் களங்களை வைத்து இருப்பதால் போக்குவரத்துக்குக் கூட இடையூறு ஏற்படுகிறது. கல், மண் கலக்கிறது. ஆகையினால் நெல் அடித்து கொள்முதல் செய்வதற்கு, அரசிடம் களங்களைக் கட்டிக் கொடுப்பதற்கு ஏதேனும் திட்டங்கள் உண்டா என அறிய விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போட வேண்டும். தஞ்சாவூர் எனக்கு நன்றாகத் தெரியும். களம் போடுவதற்கு நிலம் கிடைக்காது. நிலம் கொடுத்தால் களம் போடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. இராசாராமன்.

திரு. சோ. இராசாராமன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு நெல்லுக்கு விலையை உயர்த்திக் கொடுப்பதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாராட்டு கிறேன். இன்றைய சூழ்நிலையில் விவசாயக் கூலி அதிகமாகி விட்டது. உர விலை, பூச்சி மருந்து விலை அதிகமாகிவிட்ட காரணத்தினால் மாநில அரசும் விலையை சற்று உயர்த்திக் கொடுத்தால் விவசாயிகளுக்கு நலமாகஇருக்கும் என்று தெரிவித்து விலையை உயர்த்திக் கொடுக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 35 ரூபாய்—35 ரூபாயை குறைக்கலாமா என்று கூட இந்த நிதி நிலையை ஒட்டி யோசனைகள் வழங்கப்பட்டன, இருந்தாலும் 35 ரூபாய்—தருவதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு ரூபாய் 25. ஆக 60 ரூபாய் அதிகமாக கிடைக்கிறது. இதை விட விவசாயிக்கு எந்தக்காலத்திலும் அதிகமான விலை கிடைத்ததாக வரலாறு கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து விவசாயிகளுடைய நெல்லை பெற்றவுடன் நீண்ட நெடுங்காலமாக நெல்லை எடுத்துச் செல்லாமல் அங்கேயே போட்டுவிடுகிறார்கள். அதனால் மழை யிலும் வெயிலிலும் அந்த நெல் வீணாகி அரிசியும் கறுத்து, நல்ல அரிசியாக மக்களுக்கு கிடைப்பதில்லை. ஆகவே உடனே அந்த கொள்முதல் நிலையங்களிலிருந்து நெல்லை எடுத்துச் செல் வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஈரப்பதம் வருவதற்கு மழை தான் காரணம் அல்ல. பல்வேறு காரணங்கள் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, ஈரப்பதம் எல்லாம் நீக்கித் தருவதற்கு விவசாயிகளாலே முடியும், அந்த வகையிலே நம்மு

டைய விவசாயப் பெருமக்கள் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டு மென்ற வேண்டுகோளை விடுப்பதுதான் என்னுடைய கடமை யாக இருக்கிறது. ஏனென்றால் இன்று நல்ல விலை கிடைக்கிறது. ஆகவே உடனடியாக கோடவுன்களுக்கு, அங்கங்கே இருக்கின்ற கிடங்குகளுக்கு எடுத்துச் செல்வதற்கு ஆவன செய்யப்பட்டிருக் கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் : தலைவர் அவர்களே, நேரடி கொள்முதல் நிலையங்களிலிருந்து நெல்லைப் பிரித்து அதைக் கொண்டு சென்று கோடவுன்களிலே அரசு மூலமாக அடுக்கு கின்றபோது சில இடங்களில் கோடவுன்கள் இல்லாமல் புல் தரையிலே, வெட்ட வெளியிலே நெல்லை அடுக்கி வைக்கின்ற காரணத்தினால் மழைக் காலங்களில் பாதிக்கப்பட்டு, ஏற்கனவே சொன்னது போல் அந்த அரிசி நல்ல அரிசியாக வரமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே, வெட்ட வெளியில் நெல் மூட்டைகளை அடுக்குவது தவிர்க்கப்படுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, வெட்டவெளியிலே சில நேரங்களில் அடுக்கி வைப்பது வழக்கம். அதிகமாக நெல் வருகின்ற காலக் கட்டங்களில் அப்படி நானே பார்த்திருக்கிறேன். இது என்னுடைய இலாக்கா சம்பந்தப் பட்டதில்லை என்றாலும், பெரிய விமான தளங்கள் போன்ற காலி இடங்களில் மரக்கட்டைகளை முதலிலே தரையிலே அடுக்கி அதற்குப் பிறகுதான் நெல் மூட்டைகளை வைப்பது வழக்கம். அப்படியே புல் தரையிலே நெல்லை போட்டு வைப்பது வாடிக்கை அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தம்புசாமி.

முற்பகல் 9–45

திரு. வி. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் செய்கின்ற பொழுது அந்த நெல்லை எடுத்து வருவதற்கு வாடகை லாரிகளை நாம் பயன்படுத்துகிறோம். அப்படி வாடகை லாரிகள் வருகின்றபொழுது காலதாமதம் ஆவ தோடு அல்லாமல், தனியாக, அந்த நெல்லை கொள்முதல் செய்யக் கூடிய அந்த நபர் 100 ரூபாய் கொடுத்தால் தான் நெல்லை வந்து ஏற்றிச் செல்கிறார்கள். அப்படி ஒரு சிக்கலான பிரச்சினை இருக்கிறது. ஆகவே அதைத் தவிர்ப்பதற்கு நமது வேளாண்மைத் துறையில் இருக்கக்கூடிய டிராக்டர்களைப் பயன்படுத்துவதோடு, நெல்லை ஏற்றி வருவதற்கு லாரிகளை விலைக்கு வாங்க அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 21, திரு. ம. தனபால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் :

21—

புதிய பேருந்து வழித்தடம்.

*227 திரு. ம. தனபால் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாம்பரத்திலிருந்து மாடம்பாக்கம் நூத்தஞ்சேரி வழியாக் திருப்போரூருக்குப் புதிய பேருந்து வழித்தடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 22; திரு. வி. கே. சின்னசாமி; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

22—

ஜீவா போக்குவரத்துக் கழக கிளை அலுவலகம்.

*284 திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டியில் ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் கிளை அலுவலகம் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?